செய்தி வெளியீடு எண். 153 நாள். 19.03.2018

**கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் செயற்பதிவாளர்கள் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வரும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் நடத்துவது தொடர்பாக தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையர் முனைவர் மு.இராஜேந்திரன்,இ.ஆ.ப., அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., ஆகியோர் தலைமையில் தேர்தல் அலுவலர்களுக்கான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது**

திருவள்ளூர் மாவட்டத்தில் கூட்டுறவுத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் செயற்பதிவாளர்கள் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வரும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் நடத்துவது தொடர்பாக தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையர் முனைவர் மு.இராஜேந்திரன்,இ.ஆ.ப., அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., ஆகியோர் தலைமையில் தேர்தல் அலுவலர்களுக்கான ஆலோசனைக்கூட்டம் இன்று (19.3.2018) நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமை தாங்கினார். முன்னதாக கூட்டத்தில் வருகை புரிந்துள்ள அனைத்து வாக்காளர் பட்டியல் அலுவலர், தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் மற்றும் கலந்து கொள்ள வந்த அனைத்து அலுவலர்களையும் கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் திருவள்ளுர் அவர்கள் வரவேற்றார்கள்

இக்கூட்டத்தில் பேசிய மாவட்ட ஆட்சியர் அவர்கள் திருவள்ளுர் மாவட்டத்தில் முதல் கட்டத்தில் முதல் நிலைக்கு, 104 சங்கங்களுக்கும், இரண்டாவது நிலைக்கு 139 சங்கங்களுக்கும், மூன்றாவது நிலைக்கு 139 சங்கங்களுக்கும் நான்காவது நிலைக்கு 196 சங்கங்களுக்கும் ஆக மொத்தம் 578 சங்கங்களுக்கு தேர்தல் சிறப்பாக நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என தெரிவித்தார். இக்கூட்டத்தில் தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையர் தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கினார். இக்கூட்டத்தில் தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையர் உரையாடும் போது கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் மிகவும் சிறப்பாக நடத்த திட்டம் தீட்டப்பட்டுள்ளது என்றும், தேர்தல் தொடர்பாக வேட்பு மனு தாக்கல் படிவம், மற்றும் தேர்தல் தொடர்பான அனைத்து விவரங்களை www.coopelection.tn.gov.in என்ற இணையதள முகவரியில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் எனவும், அல்லது வெள்ளைத்தாளில் உரிய படிவத்தில் குறிப்பிட்டவாறு கைப்பட எழுதி வேட்பு மனுதாக்கல் செய்யலாம் எனவும் அதனை தேர்தல் அலுவலர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

தேர்தல் ஆணையர் பேசும்போது தேர்தல் தொடர்பாக நடத்தை விதிகள் அமுல்படுத்தப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார். இக்கூட்டத்தில் கலந்து கொண்ட தேர்தல் நடத்தும் அலுவலர்கள் / வாக்காளர் பட்டியல் அலுவலர் ஆகியோர் எழுப்பிய பல்வேறு சந்தேகங்களுக்கு தெளிவுரை வழங்கினார்கள். தேர்தல் நடைபெறும் பதற்றமான கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேவையான பாதுகாப்பினை ஏற்படுத்தப்பட்டுள்ளது எனவும், இதற்கென தனியாக கட்டுப்பாட்டு அறை துவக்கப்படவுள்ளது எனவும் திருவள்ளுர் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் தெரிவித்தார்.

மேற்கண்ட ஆலோசனை கூட்டத்தில் திருத்தணி கூட்டுறவுச் சர்க்கரை ஆலையின் மேலாண்மை இயக்குநர் (மு.கூ.பெ) திரு.தீபக் ஜேகப், இ.ஆ.ப., மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.எம்.ஆர்.சிபி சக்கரவர்த்தி, இ.கா.ப., தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையத்தின் செயலர் (மு.கூ.பெ)திரு.ம.அந்தோணிசாமி ஜான்பீ, கூட்டுறவுச் சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர்/மாவட்ட தேர்தல் பார்வையாளர் திருமதி.ம.தமிழ்செல்வி, சரகத் துணைப்பதிவாளர்கள் / மாவட்ட தேர்தல் அலுவலர்கள், செயற்பதிவாளர்கள் /மாவட்ட தேர்தல் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளுர்.**